# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 9/2017

PROSECUTION WITNESS No - PW- 22

| | | | |
|---|---|---|---|
| Name : | கணேசன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2025.

1வது, 3 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2வது எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் கடந்த 2019ல் இராமேஸ்வரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்புஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தேவகோட்டை அருகில் உள்ள தாணிச்சாவூரணியில் குடியிருந்து வருகிறேன்.கடந்த 2015ம் ஆண்டில் காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலையத்தில் சிறப்பு சார்புஆய்வாளராக பணியிலிருந்த போது கடந்த 26.02.2015ம் தேதி காலை 8.30 மணியளவில் நமனசமுத்திரத்தை சேர்ந்த திருமதி.வசந்தி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்றஎண். 19/2015 குவிமுச பிரிவு 174ன் கீழ் முதல்தகவல்அறிக்கை தயாரித்தேன். இங்கு என்னிடம் காட்டப்படுவது தான் 3-வது எதிரியான வசந்தி என்பவர் என்னிம் கொடுத்த புகார் மனு ஆகும். மேற்படி புகார்மனு **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் நான் தயாரித்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தயாரித்த முதல்தகவல் அறிக்கையை உரிய பகுதியில் வட்டாட்சியருக்கு ஒரு நகலும், சம்மந்தப்பட்ட காவல்அதிகாரிகளுக்கு மற்ற நகல்களை அனுப்பி வழக்கின் முதல்விசாரணையை நானே துவங்கினேன். முதலில் திருமயத்திற்கும் புதுக்கோட்டைக்கும் இடையில் உள்ள 464/1-2 என்ற ரயில்வே தடத்தில் உள்ள சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்தேன். இங்கு என்னிடம் காட்டப்படும் மாதிரிவரைபடம் நான் தயாரித்தது தான். மேற்படி மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்து இறந்த நபரின் உடலை வைக்கப்பட்டிருந்த திருமயம் மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.08.13 09:56:15 +0530

முன்னிலையில் பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன். மேற்படி பிரேதவிசாரணை அறிக்கை **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே மருத்துவமனை மருத்துவருக்கு பிரேதபரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான வசந்தி, அன்புக்கரசி, அபிராமி, மாணிக்கம், கருப்பையா, ராஜகுமார், ஆறுமுகம், நீலகண்டன், இளங்கோவன், ரெங்கசாமி, சிதம்பரம், சிங்கம்மாள், வள்ளியப்பன், ஆண்டியப்பன் மகன் ஆறுமுகம், அரங்குடலிங்கம் மற்றும் அய்யாகண்ணு ஆகிய சாட்சிகளை விசாரித்து முதல்கட்ட விசாரணையாக தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது வழக்கு விசாரணையிலிருந்த போது கடந்த 22.05.2015ல் வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என்பவர் இரயிலில் அடிபட்டு இறக்கவில்லை. அவர் வீட்டில் வைத்து கொலை செய்து பின்னர் தண்டவாளத்தில் போடப்பட்டுள்ளார் என தெரியவந்ததால் வழக்குகோப்பை காவல்ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

22.02.2015ம் தேதி வழக்கு பதிவு செய்து என்னால் எத்தனை மாதங்கள் புலன்விசாரணை செய்யப்பட்டது என்றால் 3 மாதங்கள் புலன்விசாரணை செய்தேன். எனது புலன்விசாரணையில் நான் எத்தனை சாட்சிகளை விசாரித்தேன் என்றால் 16 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். மேற்படி நான் விசாரித்த 16 சாட்சிகள் அனைவரும் இறந்த கிருஷ்ணமூர்த்தி வீட்டில் கொலை செய்யப்பட்டு இறந்ததாக என்னிடம் சாட்சி சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.17 பிரேத விசாரணை அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.17 பிரேத விசாரணை அறிக்கையில் 15-வது கலத்தில் (Column) இறந்த நபர் ரயிலில் அடிபட்டு இறந்ததாக பஞ்சாயத்தார்கள் கூறிய செய்தியின் அடிப்படையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் விசாரணை செய்யப்பட்ட அசா.1 சிங்கம்மாள் என்பவர் இறந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரின் தாயார் என்றால் சரிதான். அசா.1 சிங்கம்மாள் என் விசாரணையில் அவரது மகன் நல்லது கெட்டதிற்கு அவரை வந்து பார்த்து செல்வார் என்றும் அதைபோல் அவரது தந்தை அசா.6 சிதம்பரம் சில நேரங்களில் நமனசமுத்திரம் சென்று தன் மகனை பார்த்து வருவார் என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னால் விசாரணை செய்யப்பட்ட அசா.2 அபிராமி இறந்தவரின் மகள் என்றால் சரிதான். மேற்படி அசா.2 அபிராமி எனது விசாரணையில் இறந்த நபர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் 25.02.2015ம் தேதி இரவு 10.30 மணிக்கு எப்போதும் போல் இரவு உணவு அவரது அறையில் வைத்தோம் அவர் சாப்பிட்டு

விட்டு அங்கேயே தூங்கிவிட்டார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதன் பின் அவர்களும் படுத்து தூங்கிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் அசா.2 அபிராமி எனது விசாரணையில் மறுநாள் காலை 7.00 மணிக்கு கடை திறக்காததால் நாங்கள் அப்பாவை தேடி போன போது சிலர் கிருஷ்ணமூர்த்தி ரயில்வே தண்டவாளம் அருகே இறந்து கிடப்பதாக சொன்னார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இறந்தவரின் தாய் அ.சா.1 சிங்கம்மாள் அசா.6 சிதம்பரம் ஆகியோர் இறந்த கிருஷ்ணமூர்த்தியின் உடலை தன் மகனுக்கு ஆண் வாரிசு இல்லாததால் மருமகளின் சம்மதத்துடன் தங்கள் ஊருக்கு அவர் உடலை அடக்கம் செய்ய கொண்டு சென்றுள்ளோம் என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அசா.7 கருப்பையா என்பவர் எனது விசாரணையில் இறந்த கிருஷ்ணமூர்த்தி சில நேரங்களில் மனநிலை சரியில்லாமல் சத்தம் போடுவார் என்றும் தலைவலி என்று மாத்திரை சாப்பிடுவார் என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசா.10 ஆறுமுகம் எனது விசாரணையில் ரயிலில் அடிபட்டு இறந்தவர் நமனசமுத்திரம் காவல்நிலையம் அருகில் டீக்கடை நடத்தும் கிருஷ்ண மூர்த்தி என தெரிந்துகொண்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி நீலகண்டன் என்பவரை நான் தனியாக விசாரித்த போது எனது வீட்டிற்கு எதிரே இருந்த இறந்த கிருஷ்ணமூர்த்தி மனநிலை சரியில்லாதவர் போன்று சத்தம் போடுவார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அசா.17 இளங்கோவன் எனது விசாரணையில் இறந்த கிருஷ்ணமூர்த்தி ஏதோ ஒரு ரயிலில் அடிபட்டு இறந்துகிடந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் இறந்த கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும் மகனும் அழுதுகொண்டிருந்தார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசா.20 ரெங்கசாமி என்ற கிராமஉதவியாளர் எனது விசாரணையில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்த நபர் கிருஷ்ணமூர்த்தி என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அசா.11 வள்ளியப்பன், அசா.10 ஆறுமுகம் மற்றும் பட்டியல்சாட்சி அருங்குலலிங்கம் ஆகியோர்கள் எனது விசாரணையில் இறந்த கிருஷ்ணமூர்த்தி ஏதோ ஒரு ரயிலில் அடிபட்டு இறந்துகிடந்தார் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி அய்யாகண்ணு எனது விசாரணையில் இறந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்றும் அவர் யாரிடமும் கலகல என்று பேசமாட்டார் என்றும் மனநிலை சரியில்லாதவர் போன்று அவராகவே பேசிக்கொள்வார் என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் விசாரிக்கப்பட்ட

சாட்சிகளின் அடிப்படையில் இறந்த கிருஷ்ண்மூர்த்தி ரயிலில் அடிபட்டு இறந்ததாகவே குறிப்பட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை**</u>. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.08.13 09:56:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை